# குடும்பங்களுக்கான COVID-19 பற்றிய அறிவுரை

## புதுப்பிப்பு - ஜூன் 2021

இந்த COVID-19 சூழலில் நமது பாடசாலைகள் இயன்றளவுக்கு மிகவும் பாதுகாப்பான வழிகளில் தொடர்ந்து இயங்கிவருவதை உறுதிப்படுத்துவதற்காக 'ஆஸ்திரேலிய சுகாதாரப் பாதுகாப்பு தலைமைக் குழு' (Australian Health Protection Principal Committee (AHPPC)), 'NSW சுகாதாரம்' மற்றும் இதர முகமைகளுடன் நாங்கள் நெருக்கமாய்ச் செயல்பட்டுவருகிறோம்.

### 'NSW சுகாதார'த்திடமிருந்து வரும் புதுப்பிக்கப்பட்ட அறிவுரை

COVID-19 -ஐப் பற்றிய நடப்பு-நாள் வரைக்குமான புதுப்பிக்கப்பட்ட தகவல்கள் தவறாமல் தொடர்ந்து அளிக்கப்பட்டுவரும். மிகச் சமீபத்திய தகவல்களைப் பெறுவதற்கு 'NSW அரசாங்க வலைத்தல' (NSW Government website)-த்தினைப் பார்க்குமாறு குடும்பங்களை ஊக்குவிக்கிறோம்.

COVID-19 திடீர்ப்பரவல் ஒன்றை முன்னிட்டு 'NSW சுகாதார'-த்தினால் வழங்கப்படும் 'வீட்டில் தங்கியிரு' உத்திரவுகளின் காரணமாக பாடசாலைகளின் செயற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படக்கூடும். பாடசாலை செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றி உங்கள் பாடசாலையுடன் தொடர்புகொண்டு விசாரியுங்கள், மற்றும் பாடசாலை ஊழியர்களால் கொடுக்கப்படும் அறிவுரைகளைப் பின்பற்றுங்கள். அத்தியாவசியம் இல்லாத காரணங்களுக்காகப் பாடசாலை வளாகத்திற்குள் நுழைய வேண்டாம் என்று உங்களை வேண்டும் தருணமும் இதில் உள்ளடங்கும்.

### வீட்டிலிருந்து படித்தல்

பின் வரும் சூழல்களில் மாணவ-மாணவியர்கள் வீட்டிலிருந்து படிப்பதற்கான ஆதரவுதவிகளைப் பெறுவார்கள்:

- COVID-19 இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள, அல்லது இந்தத் தொற்று இருப்பதாக சந்தேகிக்கப்படும் நபர் ஒருவருடன் நெருக்கமாக இருந்திருப்பவர் என்ற காரணத்தினால் மாணவ-மாணவிக்குத் தம்மை சுய-தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவைப்பாடு இருந்தால்.
- COVID-19 திடீர்ப்பரவல் ஒன்றின் காரணமாக, அத்தியாவசியத் தொழிலாலர்களுடைய பிள்ளைகளின் 'தலக்-கல்வி'(on-site learning)க்காக மட்டும் திறந்திருக்கலாம் என்று பொது சுகாதார அறிவுரையின் கீழ் பாடசாலைகளுக்கு அறிவுறுத்தப்படும் பொழுது.

இணைய-வழி சார்ந்த, மற்றும் இணைய-வழி சாராத மூலங்கள் மற்றும் 'பயிற்சி-ஏடுகள்' மற்றும் மூலவளங்கள் போன்ற அச்சிடப்பட்ட தாள்கள் ஆகியன உள்ளடங்க, வீட்டிலிருந்து பெறும் கல்வியானது பல வடிவங்களில் இருக்கும்.

### தலக்-கல்வி அளிக்கப்படும்போது பாடசாலைக்கு வருதல்

தமது பிள்ளைகள் உடல்-நலம் சரியில்லாமல் இருந்தால், அவர்களுக்கிருக்கும் அறிகுறிகள் மிகவும் மிதமான காய்ச்சலுக்கான அறிகுறிகள் போலவே இருந்தாலும், 'NSW சுகாதார' அறிவுரையின் பிரகாரம், தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப **வேண்டாம்** என்று பெற்றோர்களுக்கும், பராமரிப்பாளர்களுக்கும் நினைவுறுத்தப்படுகிறது.

உடல் நலம் சரியில்லாமல் இருப்பவர்களும், அல்லது மிதமான காய்ச்சலுக்கான அறிகுறிகளே உள்ளவர்களும் அவர்களுடைய உள்ளூர்ப் பகுதியிலுள்ள மருத்துவர் ஒருவர் மூலமாக, அல்லது 'COVID-19 சிகிச்சையக'(COVID-19 clinics)ங்களில் ஒன்றின் மூலமாக நோயறிவுச் சோதனையை மேற்கொள்வதற்கான ஏற்பாட்டினைச் செய்துகொள்ள அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற வேண்டுகோளினை 'NSW சுகாதாரம்' பாடசாலைகளுக்கு விடுத்துள்ளது.

பாடசாலைக்குத் திரும்புவதற்கு அனுமதிக்கப்படுவதற்கு முன்பாக, தமக்கு COVID-19 இல்லை என்ற சோதனை முடிவின் பிரதி ஒன்றை மாணவ-மாணவியர் மற்றும் அங்கு பணிபுரிவோர் கொடுக்கவேண்டும், மற்றும் அவர்களுக்கு நோயறிகுறிகள் எதுவும் இல்லாமலிருக்க வேண்டும்.

## தலக்-கல்வி அளிக்கப்படும்போது பாடசாலைக்கு வருதல் பற்றிய அறிவுரை (தொடர்ச்சி)

‘COVID-19 நோயறிவுச் சோதனையை மேற்கொள்ளாத மாணவ-மாணவியர்கள் 10-நாள் காலப்பகுதி ஒன்றிற்குப் பாடசாலைக்கு வர அனுமதிக்கப்படமாட்டார்கள். அத்துடன், பாடசாலைக்குத் திரும்பி வருவதற்கு முன்பாகக் குறைந்த பட்சம் 3 நாட்களுக்கு அவர்கள் நோயறிகுறிகள் இல்லாமல் இருந்திருக்கவேண்டும்.

காய்ச்சலுக்கான அறிகுறிகளைப் போலத் தோன்றும் பருவகால ஒவ்வாமையின் காரணமாக ஏற்படும் ‘ரைனைடிஸ்’ (rhinitis) எனப்படும் நாசிக்கசிவு மற்றும் நாசி அடைப்பு உள்ள மாணவ-மாணவியர்களும் COVID-19 நோயறிவுச் சோதனையை மேற்கொண்டு, தமக்கு நோய்த்தொற்று இல்லை என்ற முடிவைக் காண்பிக்க வேண்டும். 10 நாட்களையும் தாண்டி நோயறிகுறிகள் நீடித்தால், மாணவ-மாணவிக்கு இருக்கும் அறிகுறிகள் அவருக்கு இருக்கும் நோய்-நிலைக்கு உரித்தானவை என்று அவருடைய மருத்துவரால் கொடுக்கப்படும் ஆவணச் சான்றினை அவர் கொடுக்கவேண்டும். புதிய, அல்லது மாறுபட்ட நோயறிகுறிகள் மாணவ-மாணவியருக்கு ஏற்பட்டால், அவர்கள் COVID-19 நோயறிவுச் சோதனையை மேற்கொள்ள வேண்டும். ‘COVID-19 நோயறிகுறிகள் (COVID-19 symptoms) பற்றி மேலதிகத் தகவல்களைத் தெரிந்துகொள்ளுங்கள்.

சிக்கலான உடல்நலப் பிரச்சினை அல்லது உடலியலாமை உள்ள மாணவ-மாணவியருக்கு COVID-19 நோயறிவுச் சோதனையை மேற்கொள்வதென்பது சிரமம் மிக்கதாக இருக்கலாம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், தமது பிள்ளைகளை அவர்களுடைய மருத்துவர் மூலமாக மதிப்பீடு செய்யுமாறு பெற்றோர்களையும், பராமரிப்பாளர்களையும் பாடசாலைகள் கேட்கும். COVID-19 நோயறிவுச் சோதனை ஒன்று தேவையில்லை என்று மருத்துவர் ஒருவர் தீர்மானிக்கும் தருணத்தில், COVID-19 நோயறிவுச் சோதனையைத் தேவைப்படுத்தும் நோயறிகுறிகள் தமக்கு இல்லை என்ற ஆவணச் சான்றினை பாடசாலைக்குக் மாணவ-மாணவியானவர் கொடுத்தாக வேண்டும். மாணவ-மாணவியால் பாடசாலைக்குத் திரும்ப இயலும் என்பதையும் அந்த சான்று சுட்டிக் காண்பிக்கவேண்டியது அவசியம்.

## அனைத்துப் பாடசாலைகளுக்கும், குடும்பங்களுக்குமான ஒரு நினைவூட்டல்

பாடசாலைகளும், குடும்பங்களும் COVID-19-ஐப் பற்றிய வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டியது முக்கியம். குறிப்பாக, பின்வரும் விடயங்களைச் சுட்டிக் காண்பிக்க விரும்புகிறோம்:

- பாடசாலைகள் கட்டாயமாகத் தொடர்ந்து:
  - சரீர சுகாதாரப் பழக்கவழக்கங்கள், உடல்ரீதி விலகல், சுத்திகரிப்பு மற்றும் பதிவேடுகள் பராமரிப்பு ஆகியவற்றை நடைமுறைப்படுத்தி வரவேண்டும்.
  - போதுமான அளவு இடைவெளியிலான உடல்ரீதி விலகலைப் பின்பற்றுவதற்காக, இயலும் தருணங்களில், வானிலை உகந்ததாக இருக்குமானால், வெளிப்புறப் பகுதிகளை அல்லது விசாலமான திறந்த பகுதிகளைப் பயன்படுத்தவேண்டும்.
  - பாடசாலைத் தலத்திற்கு வருகை தரும் அனைவரும், அவர்கள் வரும் ஒவ்வொரு முறையும் நோயறிகுறிகள் எதுவும் அவர்களுக்கு இல்லாமல் இருப்பதையும், ‘வருகையாளர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் ஆகியோருக்கான COVID-19 தேவைப்பாடுகள்’-இற்குக் கட்டுப்படுவதற்கான சம்மதம் உள்ளடங்க, கையெழுத்து இடுவதற்கான ஏற்பாடுகளுக்கு இணங்குவதையும் உறுதிப்படுத்தவேண்டும். அனைத்து வருகையாளர்களும் Service NSW QR code -ஐப் பயன்படுத்தித் தமது வருகையைப் பதிவுசெய்ய வேண்டியது கட்டாயமாகும். மாணவ-மாணவியரைப் பாடசாலையில் விட்டுச் செல்லும், அல்லது அங்கிருந்து அழைத்துச் செல்லும் பெற்றோர்களுக்கும், பராமரிப்பாளர்களுக்கும் கையெழுத்து இடவேண்டிய, அல்லது Service NSW QR code -ஐப் பயன்படுத்தவேண்டிய அவசியம் இல்லை.

## முகக் கவசங்களை அணிதலும் சரீர உஷ்ண-நிலைச் சோதனையும்

பாடசாலையில் இருக்கும் நேரத்தில் தமது சொந்த முகக் கவசங்களை அணிய விரும்பும் எவரொருவரும் அதை அணிவதிலிருந்து தடுக்கப்படமாட்டார்கள்.

பொதுப் போக்குவரத்து சாதனங்களில் முகக் கவசங்கள் அணியவேண்டும் என்ற ‘பொது சுகாதார உத்தரவுகள்’ கட்டாயப்படுத்தப்பட்டிருக்கும் தருணங்களில் 13 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மாணவ-மாணவியர்கள் இந்த உத்தரவிற்குக் கட்டுப்பட்டாக வேண்டும். பாடசாலை ஊழியர்களும் பொதுப் போக்குவரத்து சாதனங்களில் பயணம் செய்யும் பொழுதும், அத்துடன் பொதுப் போக்குவரத்து சாதனம் அல்லது வாடகைக்கு அமர்த்தப்பட்ட அல்லது தனியார் போக்குவரத்து சேவையில் வெளிச்-சுற்றுலாக்கள் செல்லும் பொழுதும் இந்த உத்தரவிற்கு இணங்கவேண்டும்.

அதியளவிலான சரீர-உஷ்ணச் சோதனைகள் பாடசாலைகளில் வேண்டப்படுவதில்லை மற்றும் சிபாரிசு செய்யப்படுவதில்லை.

### பாடசாலைச் சுத்திகரிப்பு மற்றும் சுகாதாரப் பழக்கவழக்கங்களுக்குத் தேவைப்படும் பொருட்கள்

AHPPC-யினது வழிகாட்டல்கள் மற்றும் 'NSW சுகாதார'த்தினது அறிவுரைகளுக்கமைய உங்களுடைய பாடசாலை கூடுதல் சுத்திகரிப்பினைத் தொடர்ந்து பெற்றுவரும். அதிகமாய்க் கை-படும் பகுதிகள், மற்ற கெட்டியான மேற்பரப்புகள், கதவின் கைப்பிடிகள், பூட்டுப்-பெட்டிகள், மின்விளக்கு ஸ்விட்சுகள் மற்றும் படிக்கட்டுகள் மற்றும் ஆள்-நடமாட்டப் பகுதிகளிலுள்ள கைப்-பிடிக் கம்பிகள் ஆகியன சுத்திகரிப்பிற்காக இலக்கு வைக்கப்படும் பகுதிகளாகும். கழிவறைகள் மற்றும் குடிநீர்ப்-பீய்ச்சிகள் ஆகியனவும் கூடுதலாகச் சுத்திகரிப்பு செய்யப்படும், மற்றும் சோப்பு போன்ற பொருட்கள் தொடர்ந்து நிரப்பப்பட்டுவரும்.

திரவ-சோப்பு, கைச்-சுத்திகரிப்பான், பேப்பர்-டவல், மேற்பரப்புகளை சுத்தம் செய்யப் பயன்படுத்தப்படும் தெளிப்பான் மற்றும் கிருமி-நாசினித் துடைப்பான்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய சுகாதாரப் பொருட்களைப் பாடசாலைகள் தொடர்ந்து அளித்துக்கொண்டிருக்கும்.

### COVID-19 தொற்று உள்ளவர்கள் குறித்த பதில் நடவடிக்கை

எமது பாடசாலைகளில் உள்ள COVID-19 இருப்பது உறுதிப்படுத்தப்பட்டவர்கள், அல்லது இந்தத் தொற்று இருப்பதாக சந்தேகிக்கப்படுபவர்கள் எவர் குறித்தும் மேற்கொள்ளப்பட வேண்டிய தெளிவான திட்டம் ஒன்று பாடசாலைகளில் தயார் நிலையில் உள்ளது. 'NSW சுகாதார'த்தினுடன் நாங்கள் நெருக்கமாய்ச் செயலாற்றிவருகிறோம், மற்றும் இக்கட்டான சூழ்நிலை ஒன்று எழுமானால், பெற்றோர்களுடன் நாங்கள் தொடர்புகொள்வோம். 'COVID-19 பதில் நடவடிக்கை நெறிமுறைகள்' (Response protocols for COVID-19 cases)-பற்றி மேலும் வாசித்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

### போக்குவரத்து

பாடசாலைக்கு வரும், மற்றும் பாடசாலையிலிருந்து செல்லும் பேருந்து சேவைகள் வழக்கம் போலத் தொடர்ந்து இயங்கும். பாடசாலைக்கு வருவதற்கும், அங்கிருந்து செல்வதற்குமான பயண அறிவுரைகளுக்கு 'NSW மாநிலப் போக்குவரத்து' (Transport for NSW)-ஐப் பாருங்கள்.

## தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை

உங்களுக்குக் கூடுதல் தகவல்கள் தேவைப்பட்டால், தயவு செய்து உங்களுடைய பாடசாலை அதிபரை அழையுங்கள். உங்களுடைய விசாரிப்பில் உங்களுக்கு உதவுவதற்காக மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால், தயவு செய்து 131 450-இல் 'தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பு சேவை'யை அழைத்து உங்களுடைய மொழியில்  மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள். இந்த சேவைக்காக உங்களுடமிருந்து கட்டணம் அறவிடப்படமாட்டாது.